பக்கங்கள் 14 + 08

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 22 புதன்கிழமை 07.08.2024 | அதிர்வு 06

## வைத்தியர் அர்ச்சுனா பிணையில் விடுவிப்பு



(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 04

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# வேட்பாளராக நாமலை அறிவித்தது 'மொட்டு'

## தலைமை அலுவலகத்தில் விசேட நிகழ்வின்போது

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அக்கட்சியின் தேசிய அமைப்பாளரான நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ போட்டியிடுவார் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. 04

# வெற்றி உறுதி!

## நாமல் சூளுரை

ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி நிச்சயம் வெற்றி பெறும் என்று அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் ஜனாதிபதி வேட்பாளருமான நாமல் ராஜபக்ஷ இன்று சூளுரைத்துள்ளார். 04






# யாழில் 65 இலட்சம் ரூபா மோசடி: பெண் உட்பட இருவர் சிக்கினர்!

(எஸ்.நிதர்ஷன்)

வங்கிக் கணக்கில் இருந்த 65 இலட்சம் ரூபாவைக் கையாடல் செய்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தில் பெண் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பணத்தை இழந்தவர் யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவில் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆலோசனைக் கட்டணங்கள் தவிர வேறு எந்தக் கட்டணமும் இன்றி வெளிநாட்டுக்கு அனுப்பப்படும் என்று சமூக வலைத்தளத்தில் விளம்பரத்தைப் பார்த்து யாழ்ப்பாணம், குருநகரைச் சேர்ந்த ஒருவர் அதில் குறிப்பிடப்பட்டிருந்த உள்நாட்டு மற்றும் பிரிட்டன் தொலைபேசி எண்களுக்குத் தொடர்பு கொண்டுள்ளார்.

அந்தத் தொலைபேசி இலக்கங்களில் பேசியவர்கள், வங்கிக் கணக்கில் ஒரு தொகைப் பணத்தை வைப்பிட்டுக் காட்ட வேண்டும் என்றும், சில ஆவணங்களைத் தங்களுக்கு அனுப்ப வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

தொலைபேசியில் பேசியவர்களின் கதையை நம்பி, தனது கடவுச்சீட்டு பிரதிகள், அடையாள அட்டைப் பிரதிகள் உட்பட பல ஆவணங்களைக் குறிப்பிடப்பட்ட கொழும்பு விலாசம் ஒன்றுக்கு அனுப்பியுள்ளார். அவர்கள் குறிப்பிட்ட தொகையை தனது வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டு, வங்கிச் செயலியில் கணக்குமீதியை ஸ்கீரின் சொட் எடுத்தும் அனுப்பியுள்ளார். இந்தநிலையில் கடந்த 27ஆம் திகதி குருநகரைச் சேர்ந்தவரது கைபேசி இலக்கம் செயலிழந்துள்ளது.

சில நாள்களின் பின்னர் வங்கிக்குச் சென்று தனது கணக்கு மீதியைச் சரிபார்த்தபோது, அவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. வங்கிக் கணக்கில் இருந்த 65 இலட்சம் ரூபாவும் காணாமல்போயிருந்த நிலையில், யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவில் அது தொடர்பில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி குணரோஜன் தலைமையிலான பொலிஸ் குழு இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்தது. விசாரணைகளின் அடிப்படையில் பெண் ஒருவர் உட்பட இருவர் யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அதிர்ச்சிகரமான தகவல்கள் வெளியாகியுள்ளன. குருநகரைச் சேர்ந்த நபரிடம் இருந்து பெறப்பட்ட ஆவணங்களைக் கொண்டும், அவரிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களைக் கொண்டும் லாவகமான முறையில் வங்கிக் கணக்கில் இருந்த பணம் வேறொரு வங்கிக் கணக்குக்கு மாற்றப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குருநகரைச் சேர்ந்தவரின் கைபேசி இலக்கத்தைச் செயலிழக்கச் செய்து, அவரிடம் இருந்து பெறப்பட்ட ஆவணங்களைக் கொண்டு ஈ-சிம் ஒன்று சந்தேகநபர்களால் பெறப்பட்டுள்ளது. தற்போது கைது செய்யப்பட்ட பெண்ணே கைபேசி நிறுவனத்துக்குச் சென்று உரையாடி, அந்த இலக்கத்துக்குரியவர் தற்போது தாய்லாந்தில் உள்ளார் என்று தெரிவித்து, தாய்லாந்து தொலைபேசி இலக்கத்தில் ஒருவரை உரையாட வைத்து ஈ-சிம்மைப் பெற்றுள்ளார். அதனால் பணப்பரிமாற்றம் தொடர்பான குறுந்தகவல்கள் உரியவருக்குக் கிடைப்பது தடுக்கப்பட்டுள்ளது.

தாம் சேகரித்த ஆவணவங்கள் தகவல்கள் என்பவற்றைக் கொண்டு, குருநகரைச் சேர்ந்தவரின் வங்கிக்கணக்குக்குள் செயலி ஊடாக நுழைந்த சந்தேநபர்கள், தற்போது கைது செய்யப்பட்ட பெண்ணின் வங்கிக்கணக்குக்கே முதலில் பணம் மாற்றப்பட்டுள்ளது. அதன்பின்னர் மற்றொருவரின் வங்கிக் கணக்குக்கு மாற்றப்பட்டுள்ளது. அந்த நபர் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் பல்கலைக்கழகம் ஒன்றில் ஐ.டி. துறையில் பணியாற்றுபவர் என்று கூறப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட இருவரும் யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.ஏ ஆனந்தராஜா முன்னிலையில் முற்படுத்தப்பட்டு, எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.





# உலக மக்களின் நலன் வேண்டி இராம கிருஸ்ண மிஷனில் வழிபாடு

(வி.ரி. சகாதேவராஜா)

உலக மக்கள் நன்மை கருதி இராமகிருஸ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீ மத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் முன்னிலையில் கல்லடியில் சிறப்பு பிரார்த்தனையும் வழிபாடும் நடைபெற்றன.

மட்டக்களப்பு கல்லடி அருள்மிகு ஸ்ரீ பேச்சியம்மன் திருச்சடங்கு பூஜைகளின் முதல் நாள் பூஜையின்போது இவ்வழிபாடு உதவி பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுரர்ச்சிதானந்தா ஜீ மகராஜ் தலைமையில் நடைபெற்றது.

பாரம்பரிய முறைப்படி முதல் பூஜையை ராமகிருஷ்ணபுரம், ராம கிருஷ்ண மிஷன் துறவியர்களும் பக்தர்களும் மாணவர்களும் மேள தாளம் முழங்க கோவிலுக்கு சென்று வழிபாடுகளை நடத்தினர்.





# குடி தண்ணீர் இணைப்பு வழங்கல்

(எம். எப். றிபாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேசத்துக்கு உட்பட்ட பாலமுனை பிரதேசத்தில் வறுமை கோட்டின் கீழ் வாழும் குடும்பத்துக்கு கட்டட நிர்மாண சங்கத்தின் அம்பாறை மாவட்டப் பணிப்பாளரும், சமூக சேவையாளருமான ஐ.எல்.எம். மிஜ்வாட் குடி தண்ணீர் இணைப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.





# யாழ். மறைமாவட்ட குரு முதல்வரை சந்தித்த ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாஸ ராஜபக்ஷ

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி வேட்பாளர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ, யாழ்ப்பாணம் மறைமாவட்ட குரு முதல்வர் அருட் தந்தை ஜோசப்தாஸ் ஜெயரட்ணம் அடிகளாரை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு இன்று மதியம் யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்தில் நடைபெற்றது.



## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வேட்பாளராக்...

கொழும்பு, நெலும் மாவத்தையில் அமைந்துள்ள பொதுஜன பெரமுனவின் தலைமை அலுவலகத்தில் இன்று புதன்கிழமை காலை நடைபெற்ற விசேட நிகழ்வின்போது இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அக்கட்சியின் பொதுச்செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் மேற்படி அறிவிப்பை விடுத்துள்ளார்.

மேலும், இந்த நிகழ்வில் பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, அக்கட்சியின் நிறுவுநர்

பஸில் ராஜபக்ஷ மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ஜயந்த கொடகொட உள்ளிட்டவர்கள் பங்கேற்றிருந்தனர்.

ஜனாதிபதி வேட்பாளர் போட்டியிலிருந்து தம்மிக்க பெரேரா விலகுவதாக உத்தியோகபூர்வமாக அறிவித்ததைத் தொடர்ந்து பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக நாமல் ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

### வெற்றி...

“எனது வெற்றி கட்சியின் வெற்றியாகும். கட்சியின் வெற்றி நாட்டின் வெற்றியாகும்.” – என்றும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், கட்சியில் இருந்து வெளியேறியுள்ள உறுப்பினர்களை மீளக் கட்சிக்கு வருமாறும் நாமல் அழைப்பு விடுத்துள்ளார்.

### வைத்தியர்...

வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா இன்று மன்னார் நீதிவான் நீதிமன்றத்தால் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்குள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு அத்துமீறி நுழைந்து கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதாக அவருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

கடமையிலிருந்த வைத்தியர்கள் மற்றும் வைத்தியசாலைப் பணியாளர்களை அச்சுறுத்தும் வகையில் நடந்துகொண்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வைத்தியசாலை நிர்வாகம் அவருக்கு எதிராக முறைப்பாடு செய்திருந்தது.

இந்த முறைப்பாடுகளுக்கு அமைய விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், கடந்த சனிக்கிழமை வைத்தியர் அர்ச்சுனாவை கைது செய்தனர்.

இதனையடுத்து மன்னார் நீதிவான் முன்னிலையில் முற்படுத்திய வேளை, வைத்தியரை இன்று வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

வைத்தியர் அர்ச்சுனா இன்று நீதிமன்றம் அழைத்துவரப்பட்டிருந்த துடன், அவரை இரண்டு சரீரப் பிணையில் செல்ல மன்னார் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

# அகில இலங்கை சிங்கள மொழிதின போட்டி அங்குரார்ப்பண நிகழ்வுகள்







அகில இலங்கை சிங்கள மொழி தின போட்டியின் சம்மாந்துறை வலய போட்டிக்கான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் (5) திங்கட்கிழமை சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

வலய சிங்கள மொழி பாட வளவாளர் ஏ.எச்.நாஷிக் அகமட் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

பிரதான அதிதிகளாக வலயக் கல்விப் பணிமனை சார்பில் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா மற்றும் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய அதிபர் எம்.ரி. மொகமட் ஜனோபர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அம்பாறை மற்றும் ஏனைய வலயங்களில் இருந்து நடுவர்கள் கலந்து போட்டிகளுக்கு மத்தியஸ்தம் வகித்தனர். தொடர்ந்து போட்டிகள் கிரமமாக நடைபெற்றன.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நாமலின் திடீர் முடிவு!

இலங்கையின் சரித்திரத்தில் முன்னெப்போதும் இல்லாத விதத்தில் கடும் போட்டியானதாக ஜனாதிபதித் தேர்தல் களம் இம்முறை விரிகின்றது.

வழக்கமாக இருமுனைப் போட்டிதான். பிரதான கட்சிகளின் இரண்டு வேட்பாளர்களில் யார் என்ற சில்லெடுப்புத்தான் நீடிக்கும். இதுவரையான எட்டு ஜனாதிபதித் தேர்தல்களும் அப்படித்தான் அமைந்தன. ஆனால் இப்போது நடக்கப்போகும் ஒன்பதாவது நாடாளுமன்றத் தேர்தல் அவற்றினின்றும் முற்றிலும் வேறுபட்டதாக அமையப் போகின்றது.

இரண்டு முனைப் போட்டி, மூன்று முனைச் சமர் என்ற நிலைமையைத் தாண்டி, நான்கு முனைத் துவந்த யுத்தமாகக் களநிலைமை மாறி இருக்கின்றது.

பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகனும், அவரின் அரசியல் வாரிசுமான நாமல் ராஜபக்ஷ களமிறங்கியிருக்கின்றமை இந்தத் தேர்தலை நன்கு சூடு பிடிக்க வைத்திருக்கின்றது.

அவரது பிரசாரத்துக்கு தந்தையார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சிறிய தந்தையார் நாமல் ராஜபக்ஷ மற்றும் ஏனைய ராஜபக்ஷ குடும்பத்தவர்கள் முழுமூச்சாக இறங்குவர் என்று அறிவிப்பு ராஜபக்ஷ, தரப்பை போட்டியின் தளத்தில் உயர்த்திவிட்டிருக்கின்றது என்பது மறுக்கப்பட முடியாத உண்மை.

ராஜபக்ஷ சந்ததியின் எதிர்கால அரசியல் நின்று, நிலைத்துத் தாக்குபிடிக்குமா என்பதற்கான சோதனைக் களமாக இந்தத் தேர்தலை தனது துணிச்சலான - கடைசிநேர - அரசியல் தீர்மானம் மூலம் மாற்றியிருக்கின்றார் நாமல் என்று கூறுவது தவறு இல்லை.

தங்களுடைய கட்சியின் பெயரையும் சின்னத்தையும் தக்க வைப்பதற்காக இந்தத் தேர்தலில் போட்டியிட்டேயாக வேண்டும் என்ற தீர்மானத்தில் ராஜபக்ஷவினர் இருந்தனர்.

அதன் காரணமாக, மொட்டுவின் பிறமூத்த தலைவர்கள் இந்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றிக்கு வாய்ப்புள்ள - அதே சமயம் தாங்கள் அணுகக்கூடிய - ஒரே வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எனக் கருதி, மொட்டுக் கட்சியைக் கைவிட்டு ரணில் பக்கம் போனபோதும் நாமல் ராஜபக்ஷ துவண்டு விடவில்லை. அப்படி போனவர்களைப் பெயர் குறிப்பிட்டு விமர்சிக்க வேண்டாம் என்று தன் கட்சிக்காரர்களுக்கு கடுமையான உத்தரவு பிறப்பித்து, தன் காரியங்களை அவர் கவனித்தார்.

தமது கட்சியின் எம்.பியும் கோடீஸ்வர வர்த்தகருமான தம்மிக்க பெரேராவை மொட்டுவின் வேட்பாளராக களமிறக்குவதன் மூலம் இந்த தேர்தலிலும் கட்சியின் பெயரையும் மொட்டுச் சின்னத்தையும் தக்க வைப்பது ராஜபக்ஷக்களின் இலக்காக இருந்தது.

ஆனால், ஆளும் தரப்பினரோ எதிரணியின் கோடீஸ்வர வர்த்தகரான தம்மிக்க பெரேராவின் வர்த்தக நலன்களை ஆபத்துக்குட்படுத்தப் போவதாக மிரட்டி, போட்டித் தளத்திலிருந்து கடைசி நேரத்தில் அவரை விலக வைத்து, அதன் மூலம் இப்போது வினையை விலைக்கு வாங்கி இருக்கின்றனர்.

ஒரு நாள் முன்னறிவித்தலில், இப்படி ஒரு திட்டவட்டமான தீர்மானத்தை விரைந்து எடுத்து ஜூனியர் ராஜபக்ஷ களத்தில் இறங்குவார் என்பதை ஆளும் தரப்பினர் - ரணில் பக்கத்தினர் - நினைத்துக் கூடப் பார்த்திருக்கமாட்டார்கள். அரசியலில் அவ்வளவு பரிச்சயம் இல்லாத தம்மிக்க பெரேராவை வேட்பாளர் பட்டியலில் பத்தோடு பதினொன்றாக வைத்து விடயத்தை ஒப்பேற்றி முடித்திருக்க வேண்டிய ஆளுந்தரப்பு 'சும்மா கிடந்த சங்கை ஊதி கெடுத்த ஆண்டி போல' தமிக்கவை போட்டியிலிருந்து வலுக்கட்டாயமாக விலக வைத்து, ராஜபக்ஷக்களில் துடிப்பான இளைஞரை அவருக்கு பதிலாக களம் இறக்க வைத்து, தனக்குத்தானே மண்ணள்ளிப் போட்டிருக்கின்றது.

ராஜபக்ஷக்களுக்கு - குறிப்பாக மஹிந்த ராஜபக்ஷவுக்கு - இன்னும் தென்னிலங்கையில் வசீகரமும் செல்வாக்கும் கவர்ச்சி ஆளுமையும் இருப்பது கண் கூடு. அதனை நாமல் ராஜபக்ஷ சரியாகப் பயன்படுத்தினால் இந்தத் தேர்தலில் முன்னணி வேட்பாளர்கள் பலர் பின் தள்ளப்படும் ஆபத்து உண்டு.

நாமல் முதல் இரண்டு இடங்களுக்குள் வரவும் கூடவாய்ப்புண்டு. அப்படி இல்லாவிட்டால் அவருக்கு வாக்களித்தோர் அடுத்த தெரிவாக யாரைக் குறிப்பிடுகின்றார்களோ நிலைமை அவருக்குச் சாதகமாகும் சூழலும் உண்டு.

# பன்மைத்துவ சேவைகளை வழங்குதல் தொடர்பில் பதுளையில் செயலமர்வு





(நடராஜா மலர்வேந்தன்)

இலங்கை தேசிய சமாதானப் பேரவையானது சமூக ஆர்வலர்களுக்கு பன்மைத்துவம் ஊடாக சேவைகளை வழங்குதல் மற்றும் நிலையான சமாதானத்தை கட்டியெழுப்புவது தொடர்பான ஒரு நாள் பயிற்சி பட்டறையை ஹட்டனில் ஏற்பாடு செய்திருந்தது.

சமயங்களுக்கு இடையிலான நம்பிக்கைகளின் கருத்தியல் முரண்பாடுகள் காரணமாகச் சமூகத்தைச் சிக்கல் மற்றும் முரண்பாடான சூழ்நிலைகளில் இருந்து விடுவித்து நிலையான அமைதியை உருவாக்குவதற்காக "பன்மைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்பு சேவைகளை வழங்குதல் மற்றும் நிலையான அமைதியை கட்டியெழுப்புதல்" என்ற தலைப்பில் ஒரு நாள் செயலமர்வு பதுளையில் நடைபெற்றது.

ஆசிரியர்கள், மருத்துவ மற்றும் சுகாதார பணியாளர்கள், ஊடகவியலாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தோட்டங்கள் தொடர்பான சமூக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சமூக ஆர்வலர்கள், தோட்டத் தலைவர்கள் மற்றும் இளம் சமூக ஆர்வலர்கள் ஆகியோரை இலக்காகக் கொண்டு இந்த நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டது.

மதங்களுக்கு இடையில் நல்லிணக்கம் மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புதல், கலாசார ரீதியாகவும் மொழி ரீதியாகவும் சம உரிமைகளை வழங்குதல் உள்ளிட்ட முரண்பாடுகளை குறைக்கும் நோக்கில் இலங்கை தேசிய சமாதான சபையால் இந்த நிகழ்ச்சித் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் ரவீந்திர சந்திரசிறி பள்ளியகுருகே வளங்களை வழங்கியதுடன், இலங்கை தேசிய சமாதான சபையின் சிரேஷ்ட திட்ட உத்தியோகத்தர் மிஸ் அயெஷா ஜயவர்தன, திட்ட உத்தியோகத்தர் மிஸ் சாமினி வீரசிறி, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் தவசீலன், பதுளை மாவட்ட அரச நிறுவன அதிகாரிகள், சிவில் அமைப்பு உறுப்பினர்கள் பங்குபற்றினர்.

# சம்மாந்துறை மாணவர்களுக்கு வழங்கப்பட்ட கௌப்பியில் புழு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சம்மாந்துறை வலய கல்வி அலுவலகத்தின் இலவச மதிய உணவு பரிசோதனைக் குழுவினரின் தகவலைத் தொடர்ந்து, குறிப்பிட்ட பாடசாலையில் வழங்கப்பட்ட கௌபியைப் பொது சுகாதார பரிசோதகர்கள் பரிசோதனைக்கு உட்படுத்திய போது மாணவர்களுக்கு வழங்கப்பட்ட கௌப்பியில் புழுத்தாக்கம் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.ஐ.எம்.கபீரின் ஆலோசனையின் பேரில், மதிய உணவு வழங்குநரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது அவருக்கு எதிராக தண்டப்பணம் அறவிடப்பட்டது. அத்துடன் நீதிவானால் எச்சரிக்கையும் செய்யப்பட்டுள்ளார்.

பாடசாலை உணவு வழங்கல் ஒரு பொறுப்பு வாய்ந்த பணி. இது தொடர்பாக அனைவரும் பொறுப்புடன் இருந்து அதன் பயனை மாணவர் சமுதாயத்துக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.





# ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நூல்கள் பிரிஸ்பேர்னில் வெளியீடு




பிரிஸ்பேர்னில் உள்ள மவுண்ட் ஓமாணி நூலக மண்டபத்தில் பாலஸ் தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறை விடம் இஸ்ரேல், இலங்கை இதழியலில் சிவகுருநாதன் ஆகிய ஐங்கரன் விக்கி னேஸ்வராவின் மூன்று நூல்களின் வெளியீடு நடைபெற்றது.

இந்த நூல் வெளியீட்டு நிகழ்வில் வாழ்த்துரையை ஈழத்தின் மூத்த பெண் எழுத்தாளர் 'தாமரைச் செல்வி' திரு மதி. ரதிதேவி கந்தசாமி ஆற்றினார். அத்துடன் தமிழ் வாழ்த்துப் பாடலை பிரிஸ்பேர்ன் தமிழ்ப் பாடசாலை மாண வர்கள் பாடினர்.

வன்னி மண்ணின் மணம் கமழும் பெண் ஆளுமையான எழுத்தாளர் தாமரைச்செல்வி ஐம்பது ஆண்டு கால எழுத்தூழியப் பணியில் தன்னை ஈடுபடுத்தியுள்ளார்.

இந்த நிகழ்வில் அவர் உரையாற் றுகையில், ஓர் எழுத்தாளனின் வாழ்வி யல் வெற்றியானது அவனது எழுத்தை எதிர்கால சந்ததியிரும் அறிந்து உணர்ந்து படிப்பதிலேயே தங்கியுள்ளது என்று தெரிவித்தார்.

யுத்தகால வன்னியின் வரிகளை யதார்த்த பூர்வமாக எழுத்துருவில் வடித்த "தாமரைச்செல்வி" ஈழத்தின் பெண் எழுத்தாளர்களுள் முதன்மையான ஒருவர். 1973 முதல் சிறுகதைகளை யும் பல புதினங்களையும் எழுதிவரும் தாமரைச்செல்வி ஒன்பது நூல்களை வெளியிட்டுள்ளார். இவருக்கு இலங்கை யின் தேசிய சாகித்திய விருதும் கிடைத் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வின் தலைமையு ரையை ஆஸ்திரேலிய தமிழ் காங்கி ரஸ், குயின்ஸ்லாந்து கிளையின் மூத்த செயற்பாட்டாளர் செந்தில் குமரன் ஆற்றினார். பின்னர் பாலஸ்தீனம் எரியும் தேசம் நூல் அறிமுகவுரையை இலக்கிய ஆர்வலர் சிவா கைலாசம் நிகழ்த்தினார். அதன்பின் ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல் நூலின் அறி முகவுரையை டாக்டர் துஷ்யந்தன் திசைநாயகம் ஆற்றினார்.

இலங்கை இதழியலில் சிவகுரு நாதன் நூலின் அறிமுகவுரையை ரஜினிகாந்த் ஜெயராமன் நிகழ்த்தி னார். தமிழக இலக்கிய ஆர்வலாராக இருப்பினும், ஈழத்து ஊடகவியலைப் பற்றி சிறப்புற உரையாற்றினார்.

ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், குயின்ஸ்லாந்து கிளையின் அனு சரணையில் நடைபெற்ற இந்த நூல்கள் வெளியீட்டு அரங்கில் பெருந்திரளான பிரிஸ்பேர்ன் வாழ் தமிழ் மக்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் இறுதியில் ஏற்புரையை நூலாசிரியர் ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்தினார்.





# காளான் வளர்ப்புக்கு உதவி



(தலவாக்கலை பி.கேதீஸ்)

விழித்தெழு பெண்ணே என்னும் கனடா அமைப்பால் தெரிவு செய்யப்பட்ட 30 பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்புகளாக காளான் வளர்ப்பு மற்றும் சந்தைப்படுத்தலுக்கு நிதி உதவி வழங்கப்பட்டது.

பெண்களுக்கான சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கான பொருளாதார ரீதியான தீர்வுகளை பெற்றுக்கொள்ள மற்றும் பெண் தலைமைத்துவ சிறு வியாபாரங்களை ஊக்குவித்தல் எனும் கருப்பொருளில் இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் அமைச்சர் ஜீவன் தொண்டமானின் இணைப்பு செயலாளர் அர்ஜுன் ஜெயராஜ், இந்த நிகழ்வுக்கான செயற்றிட்ட அதிகாரி செல்வி கனிஷ்டா மைக்கல் ஆகியோர் கலந்துக்கொண்டு காசோலைகளை வழங்கி வைத்தனர்.

# குழந்தைகளுக்குத் தாய்ப்பாலைத் தவிர்த்து பால்மா கொடுப்பது விஷத்துக்குச் சமமானது!

## சர்வதேச தாய்பால் தினத்தில் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் டாக்டர் சனூஸ் காரியப்பர் தெரிவிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

குழந்தைகளின் தேக ஆரோக்கியத்துக்குத் தேவையான தாய்ப்பாலைக் கொடுப்பதைத் தவிர்த்து ஏனைய பால்மா வகைகளைக் கொடுத்திடும் செயற்பாடு தாம் பெற்ற குழந்தைக்கு விஷத்தைக் கொடுத்திடும் செயற்பாட்டுக்குச் சமம்.

–இவ்வாறு சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை சிரேஷ்ட வைத்திய அதிகாரி டாக்டர் சனூஸ் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலை வெளிநோயாளர் சிகிச்சை பிரிவுக்கு வருகை தந்திருந்த கற்பிணித் தாய்மார் மத்தியில் உரையாற்றும் போதுஇவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சர்வதேச ரீதியில் தாய்ப்பால் தினம் கொண்டாடப்படுகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் தாய்ப்பாலுக்குச் சர்வதேச ரீதியில் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது என்பதை இந்தச் சர்வதேச தினம் சுட்டிக் காட்டுகின்றது.


ஒரு தாய் பாலூட்டல் மூலம் 42 சதவீதமான மார்பகப் புற்று நோயிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும். ஒரு தாயால் குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுப்பதன் மூலம் அந்த குழந்தைக்கு மட்டும் நன்மை கிட்டுவதில்லை தாய்க்கும் பல்வேறு வழிகளில் நன்மை கிடைக்கின்றது.



பிறந்த குழந்தை ஒன்று தொடர்ச்சியான அதன் ஆறு மாத காலத்துக்கும் தாய்ப்பாலை மட்டும் உட்கொள்ளும் போது ஆறு மாத காலத்துக்குப் பிற்பாடு இரண்டு வருட காலத்துக்குள் ஏனைய உணவுகளுடன் தாய்ப்பாலையும் சேர்த்து கொடுக்கும் பட்சத்தில் குழந்தையானது அதிகளவு நோய் எதிர்ப்பு சக்திகளைப் பெறுவதோடு புரதம் உட்பட பல்வேறு சத்துக்கள் குழந்தைக்கு கிடைக்கின்றது.

இவ்வாறு தாய்ப்பாலூட்டத்தால் வளரும் குழந்தை எதிர்காலத்தில் பூரண ஆரோக்கியமான பிரஜையாக தோற்றம் பெறும். ஒரு தாய் குழந்தைக்கு தாய்ப்பால் ஊட்டுவதால் மார்பகப் புற்றுநோயில் இருந்து 42 சதவீதம் பாதுகாத்துக் கொள்ள முடியும். அது மட்டுமல்லாது வயதான காலங்களில் ஏற்படும் எலும்பு முறிவு, எலும்பு தேய்வு போன்றவை ஏற்படாமல் இருப்பதற்கும் தாய்ப்பாலூட்டல் மிகவும் அவசியம்.

சந்தைகளில் காணப்படும் பால் மாவைத் தவிர்த்துத் தாய்ப் பாலை ஒரு குழந்தைக்குக் கொடுப்பதன் மூலம் ஒரு ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குவதோடு அவர்களின் எதிர்காலமும் சிறக்கும்.– என்றார்.


Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Haram NEK 318
Haram NEK 473
Haram NEK 477
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555





# தெரிவான பயனாளிகளுக்கு பாசிப்பயறு, உழுந்து விதைகள்!

(எம்.எப்.றிபாஸ்)

விவசாய அமைச்சால், கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்படும் பயறு மற்றும் உழுந்துப் பயிர்ச் செய்கைக்கான திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்குப் பாசிப் பயறு, உழுந்து போன்ற விதைகள் அடங்கிய பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் பீ.ரீ. எம்.இர்பான் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நிர்வாக உத்தியோகத்தர் கே.பி.சலீம், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ. எல்.ஏ.மஜீட், விவசாய போதனாசிரியர்கள், பிரதேச செயலக விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்இ, பிரிவுக்கு பொறுப்பான பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.



# சிறுவர் பாதுகாப்புச் செயலமர்வு

(எஸ்.கீதபொன்கலன்)

சிறுவர் பாதுகாப்பு தொடர்பான 2024 ஆம் ஆண்டுக்கான மாணவத் தூதுவர் தேசிய வேலைத் திட்டச் செயலமர்வு திருகோணமலையில் நடைபெற்றது.

மாணவர்களுக்குத் தலைமைத்துவ பயிற்சியை வழங்கும் நோக்கில் திருகோணமலை மாவட்ட செயலகம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் கல்வி அமைச்சு என்பன இணைந்து இந்த நிகழ்ச்சித் திட்டத்தை ஏற்பாடு செய்தமை குறிப்பிடத்தக்கது.

சிறுவர்களின் உரிமைகள், சிறுவர் பாதுகாப்பு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் சேவைகளைப் எவ்வாறு பெற்றுக் கொள்ளல், மாணவர் தலைவர்கள் தமக்கான தலைமைத்துவ பண்புகளை வளர்த்துக் கொள்ளும் விதம், பாடசாலைகளின் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான பல்வேறுபட்ட விடயங்கள் இதன் போது மாணவர்களின் மத்தியில் தெளிவூட்டப்பட்டது.

திருகோணமலை மாவட்ட செயலகத்தில்,அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி தலைமையில் நடைபெற்ற செயலமர்வில் மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.சுதாகரன், மாவட்ட உள சமூக உத்தியோகத்தர் மு.மு.மு.ஸம்ஸீத், பிரதம பொலிஸ் பரிசோதகர், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், மாணவத் தலைவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.








## எதிர்வரும் 15 முதல் கப்பல் சேவை ஆரம்பம்

## நாகையிலிருந்து காங்கேசன்துறை வருகிறது

# ‘சிவகங்கை’

(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

சட்டரீதியாக இருந்த சிக்கல்கள் தீர்ந்து அனுமதி கிடைத்தமையால், நாகை–காங்கேசன்துறை இடையிலான ‘சிவகங்கை’ பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை எதிர்வரும் 15ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிங்கப்படவுள்ளது.

நாகை துறைமுகத்திலிருந்து இலங்கையின் காங்கேசன் துறைக்கு 40 ஆண்டுகளுக்குப் பின்னர் கடந்த 2023 ஒக்டோபர் 14ஆம் திகதி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி காணொலி மூலம் பயணிகள் கப்பல் போக்குவரத்தைத் தொடங்கிவைத்தார்.

ஆனாலும், வடகிழக்கு பருவ மழையைக் காரணம் காட்டி ஒக்டோபர் 23ஆம் திகதியுடன் கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

இந்நிலையில், 2024 மே 13ஆம் திகதி நாகையிலிருந்து காங்கேசன் துறைக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்கப்படும் என இன்ட்ஸ்ரீ தனியார் கப்பல் நிறுவனம் அறிவித்தது. ஆனால், பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை பல்வேறு காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டது.

சட்ட ரீதியான அனுமதி கிடைக்காதமையதால் மே 19ஆம் திகதிக்கு மாற்றம் செய்யப்பட்டது.ஆனால், 19ஆம் திகதியும் கப்பல் சேவை ஆரம்பிங்கப்படவில்லை.

“சட்டரீதியான அனுமதி கிடைக்காதமையால் கப்பல் போக்குவரத்து ரத்து செய்யப்படுகிறது. உரிய அனுமதி கிடைத்தவுடன் போக்குவரத்து தொடங்கப்படும். முன்பதிவு செய்தவர்கள் தங்களது கட்டணத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்” என்று தனியார் நிறுவனம் அறிவித்தது.

இந்நிலையில் சட்டரீதியாக இருந்த சிக்கல்கள் தீர்ந்து கப்பல் இயக்குவதற்கான அனுமதி தற்போது கிடைத்துள்ளது.

நாகப்பட்டிணம் துறைமுகத்திலிருந்து காங்கேசன்துறைக்கு ‘சிவகங்கை’ என்ற கப்பல் இயக்கப்படஉள்ளது. இதற்காக அந்தக் கப்பல் சென்னையிலிருந்து கடந்த திங்கட்கிழமை மாலை நாகை துறைமுகம் வந்து சேர்ந்தது. சோதனை ஓட்டம் நடத்தப்பட்டு எதிர்வரும் 15ஆம் திகதி முதல் மீண்டும் நாகையிலிருந்து இலங்கைக்கு பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும் என்று தனியார் நிறுவனம் அறிவித்துள்ளது.

## ஆம்ஸ்ட்ரோங் கொலை வழக்கு: இளைஞர் காங். நிர்வாகி கைது

பகுஜன்சமாஜ்கட்சியின்மாநிலதலைவராக இருந்த ஆம்ஸ்ட்ரோங் கடந்த ஜூலை 5ஆம் திகதி பெரம்பூரில் உள்ள அவரது வீட்டருகே கொலை செய்யப்பட்டார். இந்த வழக்குத் தொடர்பாக பிரபல ரவுடி ஆற்காடு சுரேஷின் தம்பி பொன்னை பாலு, கூட்டாளி திருவேங்கடம் உள்பட 21 பேர் அடுத்தடுத்து கைது செய்யப்பட்டனர். இவர்களில், திருவேங்கடம் பொலிஸாரால் என்கவுன்டர் செய்யப்பட்டார்.

இக்கொலை தொடர்பாக தி.மு.க, அ.தி.மு.க, பா.ஜ.க, த.மா.கா. கட்சிகளைச் சேர்ந்தவர்கள், வழக்கறிஞர்கள், ரவுடிகள் எனப் பல்வேறு தரப்பினர் அடுத்தடுத்து சிக்கியதால் பரபரப்பு ஏற்பட்டது.



ஆனாலும் கொலைக்கான காரணம், மூளையாகச் செயல்பட்டவர்களின் பின்னணி இன்னும் முழுமையாக வெளியாகவில்லை.

இந்நிலையில், காவலில் உள்ள அருள் என்பவர் கொடுத்த தகவலின் படி, ஆம்ஸ்ட்ரோங் கொலை வழக்கில் இளைஞர் காங்கிரஸ் மாநில முதன்மை பொதுச்செயலாளர் அஸ்வத்தாமனை பொலிஸார் கைது செய்தனர். கொலை வழக்குத் தொடர்பாக அவரிடம் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

அஸ்வத்தாமனின் தந்தையான ரவுடி நாகேந்திரனுக்கும், ஆம்ஸ்ட்ரோங்கிற்கும் முன்விரோதம் இருந்தது எனத் தகவல் வெளியாகி உள்ளது. ஆம்ஸ்ட்ரோங்கின் கைத்தொலைபேசியை ஆய்வு செய்த போது, சிறையில் இருந்தபடி ரவுடி நாகேந்திரன் அவரிடம் பேசியமை தெரியவந்தது. நிலப்பிரச்சினை தொடர்பாக தன் மகனிடம் ஆம்ஸ்ட்ரோங் மோதியதால், சிறையில் இருந்தபடி ரவுடி நாகேந்திரன் மிரட்டினார் எனப் பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது.

ஆம்ஸ்ட்ரோங் கொலை வழக்கில் கைதுசெய்யப்பட்ட அஸ்வத்தாமன் தமிழக காங்கிரஸ் கட்சியில் இருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.




# வினேஷ் தகுதி நீக்கம்

## இந்தியாவின் தங்கக்கனவு

# தகர்வு!

பரிஸ் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற இந்திய மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத் தகுதிநீக்கம் செய்யப்பட்டிருப்பது இந்திய ரசிகர்களை அதிர்ச்சியில் உறைய வைத்துள்ளது.

பரிஸில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் போட்டியில், இந்திய மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத், 50 கிலோ எடைப்பிரிவில் பங்கேற்றார். தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட்ட அவர், இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார். அவர் தங்கப்பதக்கம் வெல்வார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவரது உடல் எடை 100 கிராம் கூடுதலாக இருந்தமையால் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இதனால், வினேஷ் போகத்திடம் தோல்வியடைந்த கியூபா வீராங்கனை கஸ்மான் லோபஸ் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார்.

கடந்த ஒலிம்பிக்கில் 53 கிலோ எடைப் பிரிவில் விளையாடிய வினேஷ் போகத், இந்த முறை உடல் எடையை குறைத்து 50 கிலோ எடைப்பிரிவில் பங்கேற்றார்.

உடல் எடையை குறைப்பதற்காக வினேஷ் போகத் உணவை குறைத்துள்ளார். இதுதவிர கடுமையான பயிற்சிகளையும் செய்துள்ளார். நேற்று இரவு நித்திரையின்றி பயிற்சி செய்துள்ளார். இந்திய அதிகாரிகளும் ஒலிம்பிக் குழுவிடம் கூடுதல் அவகாசம் கேட்டனர். ஆனால் இந்த முயற்சிகள் வீணாகின.

இன்று காலை எடையை சோதனை செய்த போது, வினேஷ் வெறும் 100 கிராம் அதிக எடையுடன் காணப்பட்டார் என இந்தியப் பயிற்சியாளர் தெரிவித்தார். இந்த விளிம்பு சிறியதாக இருந்தாலும், ஒலிம்பிக் விதி முறையில் விதிவிலக்கு எதுவும் இல்லாததால் போட்டியில் இருந்து அவர் வெளியேற்றப்பட்டுள்ளார்.

## மோடி ஆறுதல்

மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத் முன் உள்ள வாய்ப்புகள் குறித்து இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் பி.டி.உஷாவிடம் பிரதமர் மோடி தொலைபேசியில் கேட்டறிந்தார்.

வினேஷ் போகத்திற்கு தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும். தகுதி நீக்கத்திற்கு இந்தியா கடுமையாக எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும்” என பிரதமர் மோடி அறிவுறுத்தினார் எனவும் தகவல் வெளியாகி உள்ளது.

இதேவேளை, மோடி தனது எக்ஸ் தளத்தில் வினேஷ் போகத்திற்கு ஆறுதலளிக்கும் வகையில் பதிவிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



## ஜனநாயகக் கட்சியின் துணை அதிபர் வேட்பாளர்

# அறிவிப்பு!

அமெரிக்க அதிபர் தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடித்துள்ள நிலையில், ஜனநாயகக் கட்சியின் துணை அதிபர் வேட்பாளராக டிம் வால்ஸ்டை கமலா ஹறிஸ் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவில் வரும் நவம்பர் மாதம் 5ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடக்கவுள்ளது. அதில் குடியரசுக் கட்சி சார்பாக டிரம்ப் மற்றும் ஜனநாயக கட்சி சார்பில் கமலா ஹாரிஸ் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

இந்நிலையில், ஜனநாயகக் கட்சியின் துணை அதிபர் வேட்பாளரை கமலா ஹறிஸ் அறிவித்துள்ளார். அதன்படி, ஜனநாயகக் கட்சியின் துணை அதிபர் வேட்பாளராக டிம் வால்ஸ்டை கமலா ஹாரிஸ் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவின் மின்னெசோட்டா மாகாண கவர்னராக டிம் வால்ஸ் இருந்து வருகிறார். இவர் மின்னெசோட்டா மாகாண எம்.பியாகவும் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.





பக்கங்கள் 08
கனடா முரசு
புதன்கிழமை 07/08/2024

## கனடாவில் கொள்ளையில் ஈடுபட்ட சகோதரர்கள் இரண்டு பேர் கைது!

கனடாவின் ரெறான்ரோ பெரும்பாக பகுதியில் பல்வேறு கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புடைய இரண்டு சகோதரர்கள்கைதுசெய்யப்பட்டுள்ளனர். கடந்த ஜூலை மாதம் C2



# கனடாவின் பாதுகாப்பு ஏற்பாடுகள்; எதிர்க்கட்சி கடுமையான விமர்சனம்

கனடிய அரசாங்கத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து எதிர்க்கட்சிகள் விமர் சனம் வெளியிட்டுள்ளன.

அண்மையில் கனடாவில் தீவிரவாத தாக்குதல் நடத்துவதற்கு திட்டமிட்டு இருந்த நிலையில் தந்தை, மகன் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த இருவரும் எவ்வாறு கனடாவில் குடியேறினர் என கான்சர்வேட்டிவ் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

கான்சர்வேட்டிவ் கட்சியின் அவை தலைவர் அன்ட்றூ ஷியர் இந்த கேள் வியை எழுப்பியுள்ளார்.

கனடிய குடியுரிமை வழங்கும் போது அவர்கள் தொடர்பான தகவல்களை ஆய்வுக்கு உட்படுத்தல் பலவீனமடைந் துள்ளதா என அவர் கேள்வி எழுப்பியுள் ளார். C2



# தகாத செயலில் ஈடுபட்டநபரை தேடும் ரொறன்ரோ பொலிஸார்

கனடாவின் ரொறன்ரோ கிழக்குப் பகுதியில் தகாத செயலில் ஈடுபட்ட நபர் ஒருவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

பாதையில் நடந்து சென்ற பெண் ஒருவரை இந்த நபர் பெண் ஒருவரைப் பாலியல் ரீதியாக துன்புறுத்தியுள்ளார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வீதிகளுக்கு அருகாமையில் C2






# கனடாவில் காணாமல் போயுள்ள தமிழரை கண்டுபிடிக்க உதவி கோரும் பொலிஸார்!

கனடாவில் காணாமல் போயுள்ள தமிழரை கண்டுபிடிக்க பீல் (Peel) பிராந்திய பொலிஸார் பொது மக்களின் உதவியை நாடியுள்ளனர்.

64 வயதான யோகராஜா என்பவர் கடந்த 31ஆம் திகதி புதன்கிழமை முதல் பிரம்டன் (Brampton) நகரில் வைத்து காணாமல் போயுள்ளார் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

ஒன்றாரியோ மாகாண உரிமத் தகடு CFAZ 745 கொண்ட 2019 Grey Honda Odyssey வாகனத்தில் இவர் கடைசியாக பயணித்தார் எனவும் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவரைஎ அல்லது குறிப்பிட்ட வாகனத்தைக் கண்டவர்கள் தம்மை தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் பொது மக்களை வலியுறுத்தியுள்ளனர்.

எவ்வாறாயினும், குறித்த நபர் திட்டமிடப்பட்டு கடத்தப்பட்டிருக்கலாம் என குடும்பத்தினர் சந்தேகம் தெரிவித்துள்ளனர் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இவரது தொலைபேசி கடந்த 31ஆம் திகதி மதியம் 12.31 முதல் செயலிழந்துள்ளதாகவும் குடும்பத்தினர் கூறியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




யோகராஜா 5அடி 2 அங்குலம் உயரமும் 150 பவுண்டுகள் எடையும் கொண்டவர் எனப் புலனாய்வாளர்கள் விவரிக்கின்றனர்.

அவர் நடுத்தர அல்லது கறுப்பு நிறத்தவர். குறுகிய கருப்பு மற்றும் வெள்ளை முடி கொண்டவர். அவர் கடைசியாக நீல போலோ ரக ஷேர்ட், கறுப்பு நிற பாண்ட் மற்றும் கருப்பு ஓடுவதற்குப் பயன்படும் காற்சப்பாத்து ஆகியன அணிந்திருந்தார்.

தகவல் தெரிந்தவர்கள் 22 ஆவது பிரிவு குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் புலனாய்வாளர்களை (905) 453-2121, ext. 2233. பீல் க்ரைம் ஸ்டாப்பர்களை 1-800-222-TIPS (8477) என்ற எண்ணில் அழைப்பதன் மூலமோ அல்லது peelcrimestoppers.ca ஐப் பார்வையிடுவதன் மூலமோ அநாமதேயத் தகவலைச் சமர்ப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

14 ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரையில் இந்தச் சந்தேக நபர்கள் பல்வேறு இடங்களில் ஆயுத முனையில் கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கத்திகள் மற்றும் துப்பாக்கிகளை பயன்படுத்தி இவர்கள் கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சில்லறை கடைகள், வர்த்தக நிலையங்கள் போன்றவற்றில் இவர்கள் இவ்வாறு பணம் மற்றும் லொத்தர் சீட்டுகள் போன்றவற்றை சூறையாடியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இருவரும் பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு நடத்த முயற்சித்தனர் எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் ஏதேனும் மேலதிகதகவல்கள் இருந்தால் வழங்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரியுள்ளனர்.

## தகாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஜூலை மாதம் 3 ஆம் திகதி இந்த சம்பவங்கள் பதிவாகியுள்ளன. சம்பவத்தின் பின்னர் அந்நபர் சம்பவ இடத்திலிருந்து தப்பி சென்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 20 முதல் 30 வயது மதிக்கத்தக்க ஐந்து அடி பத்து அங்குலம் உயரமான கருப்பினத்தவர் ஒருவர் இந்த குற்றச்செயலை மேற்கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நபர் தொடர்பிலான தகவல்கள் ஏதேனும் இருந்தால் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

## கனடாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டவர் ஒருவரை அங்கீகரிக்கும் போது அவர் தொடர்பில் ஆய்வு நடத்தப்படுவது இல்லையா என அவர் மேலும் கேள்வி எழுப்பியுள்ளார்.

62 வயதான பவுட் முஸ்தபா எல்டிடி மற்றும் அவரது மகன் 26 வயதான முஸ்தபா எல்டிடி ஆகியோர் அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

தீவிரவாத சதி திட்டம் ஒன்றை முன்னெடுக்கவிருந்த நிலையில் இவர்கள் கைது செய்யப்பட்டு இருந்தனர்.

இந்த இருவருக்கும் கனடிய அரசாங்கம் எவ்வாறு குடியுரிமை வழங்கியது என்பது குறித்து கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இருவருக்கும் கனடாவிற்குள் குடிபெயர்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. பயங்கரவாதக் குற்றச்சாட்டு உடைய நபர்கள் நாட்டில் குடியேறுவது ஏற்றுக் கொள்ள முடியாது என கொன்சர் வேட்டிவ் கட்சி தெரிவித்துள்ளது.

இந்த விடயமானது தற்போதைய அரசாங்கத்தின் பாதுகாப்பு முறைமையில் காணப்படும் பாரிய தோல்வி என கான்சர்வேட்டிவ் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.



# சில்கோடின் நதியை ஒட்டி வெள்ளப்பெருக்கு அபாயம்

பிரிட்டிஷ் கொலம்பியாவில் ஏற்பட்ட நிலச்சரிவொன்றால் நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதால், சில இடங்களில் வாழ்வோர் உடனடியாக வெளியேறுமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியாவிலுள்ள சில்கோடின் நதியில், நிலச்சரிவால் மண் விழுந்து, தண்ணீரை தடுத்து நிறுத்தி, அணை ஒன்றை உருவாகிவிட்டது.

நீர் வரத்து அதிகமாவதால், அந்த அணையையும் உடைத்துத் தாண்டி தண்ணீர் வெளியேறத் துவங்கியுள்ளது.

ஆகவே, சில்கோடின் மற்றும் பிரேஸர் நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளதுடன், மீண்டும் நிலச்சரிவு ஏற்படும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

ஆகவே, இந்த இரண்டு நதியோரமும் வாழும் மக்கள் உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல உத்தரவிடப்பட்டுள்ளது.

நதியில் ஏற்பட்ட நிலச்சரிவால், சுமார் 61 மில்லியன் கியூபிக் மீற்றர் அளவுக்கு தண்ணீர் குவிந்துள்ளது.

அதாவது, 24,000 ஒலிம்பிக் நீச்சல் குளங்களின் அளவுக்கு தண்ணீர் சேர்ந்துள்ளதால், அந்த தண்ணீர் அணையை உடைத்துக்கொண்டு வெளியேறுமானால் அது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடும் என அதிகாரிகள் எச்சரித்துள்ளார்கள்.




# ஒன்றாரியோவின் டுவின் நதியில் நீரில் மூழ்கி ஒருவர் உயிரிழப்பு!

ரொறன்ரோவின் ஒன்றாரியோ நதியில் நீந்தி கொண்டிருந்த ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

38 வயதான நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வட கிழக்கு ஒன்றாரியோவில் அமைந்துள்ள டுவின் நதி பகுதியில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

நீரில் மூழ்கியது தொடர்பில் தகவல் கிடைக்கப்பெற்றதும் மீட்பு பணியாளர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து குறித்த நபரை மீட்டுள்ளனர்.

நீரில் மூழ்கிய நபரை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்த போதும் அந்நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உயிரிழந்தவர் உள்ளூரைச் சேர்ந்த ஒருவர் எனப் பொலிஸெ தெரிவிக்கின்றனர்.



# டாக்ஸிக் கட்டணக் கொடுக்கல் வாங்கல்களின் போது இடம்பெறும் மோசடி குறித்து பொலிஸார் எச்சரிக்கை

கனடாவின் ரொறன்ரோவில் இடம் பெற்று வரும் மோசடி சம்பவம் குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ரொறன்ரோவின் சில பகுதிகளில் டாக்ஸி கொடுக்கல் வாங்கல்களின் போது மோசடிகள் இடம் பெற்று வருகின்றனர் என ரொறன்ரோ பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் ஆறு சந்தேக நபர்களைத் தேடி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ரொறன்ரோ பொலிஸார் இது தொடர்பில் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அண்மைய நாட்களாக டாக்ஸி தொடர்பான கொடுக்கல் வாங்கல் மோசடிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிலர் தங்களை டாக்ஸி சாரதிகளாகவும், பயணிகளாகவும் அடையாளப்




படுத்திக் கொண்டு மோசடிகளில் ஈடுபடுகின்றனர் எனர் தெரிவிக்கப்படுகிறது.

தங்களால் கிரெடிட் அல்லது டெபிட் கார்டுகளை பயன்படுத்த முடியாது என கூறுகின்றனர் எனவும் இதனைத் தொடர்ந்து அருகாமையில் இருப்பவர்கள் தங்களது அட்டைகளை பயன்படுத்தி கட்டணங்களை செலுத்துகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் போது உள்ளீடு செய்யப்படும் இலக்கங்களை பயன்படுத்தி இந்த மோசடிகள் இடம் பெறுவதாக எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

கடன் அட்டை கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியாதவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் சிலர் உதவும் போது அதனைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி இந்த மோசடிகள் இடம் பெறுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகம் ஏற்படாத வகையில் இந்த அட்டை கொடுப்பனவு மோசடிகள் இடம் பெறுகின்றன எனவும் தகவல்களைப் பெற்றுக்கொண்டு அதன் ஊடாக பண மோசடிகள் இடம் பெறுகின்றன எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மோசடியுடன் தொடர்புடைய 6 சந்தேக நபர்கள் பற்றிய விவரங்களையும் பொலிஸார் வெளியிட்டுள்ளனர்






# டொரன்டோ பல்கலைக்கழக வளாகத்தில் போலி குண்டு!

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 07

டொரன்டோ பல்கலைக்கழக வளாகத்தில் போலி குண்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ரொறன்ரோ ஸ்காரப்ரோ பல்கலைக்கழகத்தில் வெடிகுண்டு அச்சுறுத்தல் விடப்பட்டதை அடுத்து, செவ்வாய்க்கிழமை இரண்டு கட்டடங்களைப் பொலிஸார் காலி செய்து, விசாரணைகளை ஆரம்பித்தனர்.

பிற்பகல் 3:45 மணியளவில் இந்த சம்பவம் தொடர்பில் தங்களுக்கு அழைப்பு வந்ததாகப் டொரன்டோ பொலிஸார் தெரிவித்தனர்.

மிலிட்டரி டிரெய்ல் மற்றும் எல்ஸ்மியர் வீதிப் பகுதியில் உள்ள வளாகத்தில் சந்தேகத்திற்கிடமான பொதி ஒன்று இருந்துள்ளது.

பல்கலைக்கழகத்தின் கூற்றுப்படி, சுற்றுச்சூழல் அறிவியல் மற்றும் வேதியியல் கட்டடத்தில் வழக்கமான ரோந்துப் பணியின் போது வளாகப் பாதுகாப்புப் பிரிவினர் பொதியைக் கண்டுபிடித்துள்ளனர்.

ரிமோட் ரோபோவைப் பயன்படுத்தி குறித்த பொதி எக்ஸ்ரே எடுக்கப்பட்ட போது, எக்ஸ்-கதிர்களைப் பார்த்த அதிகாரிகள் அதை வெடிக்கும் சாதனம் என்று கண்டறிந்துள்ளனர்.

இதன் விளைவாக, மிகுந்த எச்சரிக்கையுடன், சுற்றுச்சூழல் அறிவியல் மற்றும் வேதியியல் கட்டடம் மற்றும் பயிற்றுவிப்பு மையத்திலிருந்தோர் வெளியேற்றப்பட்டனர்.

மேலும் அருகிலுள்ள சாலைகள் மூடப்பட்டன.

பாதுகாப்பான தூரத்திலிருந்து அதை தொலைவிலிருந்து வெடிக்க முன்னெச்சரிக்கைகள் பயன்படுத்தப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன்பின்னர் குறித்த பொதியில் இருந்தது போலி வெடிகுண்டு என்பதனை பொலிஸார் கண்டறிந்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள், 416-808-4300 என்ற எண்ணில் அல்லது குற்றத்தைத் தடுப்பவர்களை அநாமதேயமாக தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.




# பிரிட்டிஷ் கொலம்பியாவிலிருந்து பஸ், ரயில்களில் பயணித்து மெக்சிகோவைச் சென்றடைந்த பயணி

பிரிட்டிஷ் கொலம்பியா, ஓகஸ்ட் 7

கனடாவை சேர்ந்த நபர் ஒருவர் பொது போக்குவரத்தை பயன்படுத்தி மெக்சிகோவுக்கு பயணம் செய்துள்ளார்.

பிரிட்டிஷ் கொலம்பியாவிலிருந்து இந்த நபர் மெக்சிகோ வரையிலான பயணத்திற்கு முழுக்க முழுக்க பொது போக்குவரத்துச் சாதனங்களையே பயன்படுத்தி உள்ளார்.

வில்லியம் ஹுய் என்ற நபரே இவ்வாறு பொது போக்குவரத்தை மட்டும் பயன்படுத்தி இந்த பயணத்தை முன்னெடுத்துள்ளார்.

ஒன்பது நாள்கள் சுமார் 3000 கிலோமீற்றர் பயணத்தை அவர் மேற்கொண்டுள்ளார். பஸ் மற்றும் ரயில்களைப் பயன்படுத்தி அவர் இந்த பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

ஜன்னலோர ஆசனங்களில் அமர்ந்து காட்சிகளை பார்த்து மகிழ்வது அனாதியானது எனவும் அந்த அனுபவத்தை தாம் பெற்றுக் கொண்டார் எனவும் அவர் தெரிவிக்கின்றார்.

கனடாவில் இருந்து மெக்சிகோ வரையிலான பயணத்திற்கு தமக்கு சுமார் 200 அமெரிக்க டொலர்கள் செலவானதாக வில்லியம் ஹுய் தெரிவித்துள்ளார்.

# கெர்பர் ரக சிறுவர் உணவு வகை குறித்து கனடாவில் விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை




ஒன்ராரியோ, ஓகஸ்ட் 07

கனடாவின் முன்னணி சிறுவர் தானிய உணவு பொருள் உற்பத்தி நிறுவனம் ஒன்றின் பிரதான உற்பத்திகள் இரண்டை சந்தையில் இருந்து மீள பெற்றுக் கொள்ளுமாறு கனடிய சுகாதார திணைக்களம் அறிவித்துள்ளது.

கெர்பர் பண்டக்குறியைக் கொண்ட ஓட் பனானா மற்றும் மேங்கோ பேபி சீரியல் உணவு வகைகள் இவ்வாறு சந்தையிலிருந்து மீள பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தஉணவுவகையில்கொரோனோ பாக்டர் என்ற பாக்டீரியா தாக்கம் ஏற்பட்டு இருக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் இந்த உணவு பொருள் வகைகள் சந்தையிலிருந்து மீள பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என கனடிய சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அல்பர்ட்டா, பிரிட்டிஷ் கொலம்பியா, மனிடோபா, நியூ பிரவுன்ஸ்வுக், ஒன்றாரியோ, கியூபிக், சஸ்கட்ச்வான் மற்றும் சில மாகாணங்களில் இந்த உணவுப் பொருள் இணைய வழியில் விற்பனை செய்யப்பட்டு இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

227 கிராம் எடையுடைய பக்கெட்களில் இந்த உணவுப் பொருள் விற்பனை செய்யப்பட்டதாகவும் இந்த உணவுப் பொருளின் காலாவதி தினம் அடுத்த ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த உணவு பொருள்களை பயன்படுத்த வேண்டாம் என கனடிய சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த உணவு வகையை பார்க்கும் போது அதில் எவ்வித பாதிப்பும் ஏற்பட்டமை தென்படாது எனவும் துர்நாற்றம் வீசாது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், இவற்றை உட்கொள்வதனால் உபாதைகளை எதிர் நோக்க நேரிடலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது சிசுக்களை பாதிக்கும் எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.



# டொரன்டோ பெரும்பாகத்தில் வீடு விற்பனை சற்று அதிகரிப்பு

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 07

டொரன்டோ பெரும்பாகத்தில் வீடு விற்பனை கடந்த ஆண்டை விட இந்த ஆண்டின் ஜூலை மாதம் அதிகரித்துள்ளது.

ஆனாலும் இந்த வருடத்தின் ஜுன் மாதத்தை விட ஜூலை மாத வீடு விற்பனை குறைவடைந்துள்ளது.

இந்த வருடம் ஜூலை மாதம் டொரன்டோ பெரும்பாகத்தில் 5,391 வீடுகள் விற்பனையாகியுள்ளன.

கடந்த ஆண்டு இதே மாதத்தில் விற்கப்பட்ட 5,220 வீடுகளுடன் ஒப்பிடுகையில் இது 3.3 சதவீதம் அதிகரிப்பாகும்.





# கல்கரி நகரைத் தாக்கிய புயல் ஆலங்கட்டி மழையும் பெய்தது

அல்பேர்ட்டா, ஓகஸ்ட்07

கல்கரி நகரைத் தாக்கிய புயல் வீடுகள், வாகனங்கள், விமான நிலையங்களுக்கு பரவலாக சேதத்தை ஏற்படுத்தியது.

திங்கட்கிழமை கல்கரி பகுதியில் ஆலங்கட்டி மழை, கனமழை பெய்தது.

இது வீடுகள், வாகனங்கள், கல்கரி சர்வதேச விமான நிலையத்திற்கு பரவலாக சேதத்தை ஏற்படுத்தியது.

சுற்றுச்சூழல் கனடா திங்கள் இரவு 8 மணியளவில் கடுமையான இடியுடன் கூடிய மழை எச்சரிக்கையை வெளியிட்டது.

இந்தப் புயல் கல்கரி நகரம் முழுவதும் பரவியதால், நகரின் வடக்குப் பகுதியில் ஆலங்கட்டி மழை பெய்தது.

விமான நிலையத்தில் ஏற்பட்ட சேதத்தால் பயணிகள் வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

மழையால் ஏற்பட்ட சேதம் காரணமாக அதன் உள்நாட்டு முனைய கட்டடம் மூடப்பட்டதாக திங்களன்று விமான நிலையம் அறிவித்துள்ளது.



# 6 முறை ஒலிம்பிக்ஸ் பதக்கம் வென்ற கனடிய வீரரின் பயிற்சியாளரின் அங்கீகாரம் இரத்து என்று அறிவிப்பு!

ஒன்ராரியோ, ஓகஸ்ட்07

ஆறு முறை ஒலிம்பிக்ஸ் பதக்கம் வென்ற கனடிய வீரரின் பயிற்சியாளரின் அங்கீகாரத்தை இரத்து செய்துள்ளதாக கனடிய ஒலிம்பிக்ஸ் குழு தெரிவித்துள்ளது.

பயிற்சியாளர் ரானா ரெய்டரின் அங்கீகாரத்தை கனடிய ஒலிம்பிக்ஸ் குழு இரத்து செய்துள்ளது. இவர் ஒலிம்பிக் பதக்கம் வென்ற கனடிய வீரர் அன்ரே டி கிராசின் பயிற்சியாளராவார்.

புதிதாக கிடைக்கப்பட்ட தகவல்கள் அடிப்படையில் இந்த முடிவை எடுத்துள்ளதாக கனடிய ஒலிம்பிக்ஸ் குழு தெரிவித்துள்ளது.

ஆனால் இந்த புதிய தகவலின் தன்மை குறித்து கனடிய ஒலிம்பிக்ஸ் குழு தகவல் வெளியிடவில்லை.

ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் அன்ரே டி கிராஸ் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

# பரிஸ் ஒலிம்பிக் போட்டியில் கனடாவுக்கு ஆறாவது தங்கம்




ஒன்ராரியோ, ஓகஸ்ட்07

2024 பரிஸ் ஒலிம்பிக் போட்டியில் கனடா ஆறாவது தங்கப் பதக்கத்தை வென்றுள்ளது.

பெண்களுக்கான சம்மட்டி எறிதல் போட்டியில் நேற்று கனடா தங்கம் வென்றுள்ளது.

இந்தப் போட்டியில் 25 வயதான கனடிய வீரர் கெமரின் ரொஜர்ஸ் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

பெண்களுக்கான சம்மட்டி எறிதல் போட்டியில் முதல் தடவையாக கனடா தங்கம் வென்றுள்ளது.

ஆண்களுக்கான சம்மட்டி எறிதல் போட்டியிலும் இம்முறை கனடா தங்கப் பதக்கத்தை வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

2024 பரிஸ் ஒலிம்பிக் போட்டியில் கனடா இதுவரை ஆறு தங்கம், நான்கு வெள்ளி, எட்டு வெண்கலம் என மொத்தம் பதினெட்டு பதக்கங்களை வெற்றி பெற்றுள்ளது.

# தற்காலிக வெளிநாட்டு ஊழியர்களை குறைக்க கனடா மத்திய அரசு திட்டம்

ஒன்ராரியோ, ஓகஸ்ட்07

கனடாவில் தற்காலிக வெளிநாட்டு ஊழியர்கள் எண்ணிக்கையை குறைக்கும் திட்டங்களை மத்திய அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

வேலை வாய்ப்பு அமைச்சர் ரெண்டி பொய்சனோவ் நேற்று இந்தத் தக வலை வெளியிட்டார்.

தற்காலிக வெளிநாட்டு ஊழியர்கள் எண்ணிக்கையை குறைக்கும் திட்டங்கள் தொடர்பான புதிய விதிமுறைகளை மத்திய அரசு பரிசீலித்து வருவ தாக அவர் கூறினார்.

கனடிய தொழிலாளர்களை பணி யமர்த்துவதை தவிர்க்க தற்காலிக வெளிநாட்டு தொழிலாளர் திட்டத்தை பயன்படுத்த முடியாது என அமைச்சர் தெரிவித்தார்.

தற்காலிக குடியிருப்பாளர்கள் கனடிய மக்கள் தொகையில் 6.8 சத வீதமாக உள்ளனர் என அண்மைய மக்கள் தொகை கணக்கெடுப்பு மதிப்பிடுகிறது.